**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

**Calendar : CC . 51 /2018.**

**Deposition of witness**
**for prosecution : PW.1 ராஜேந்திரன்**
**Fathers Name/Husband Name : கணபதி**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.02.2023

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

1.நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எங்கள் ஊர்சாட்சிகளை தெரியும். 2வது சாட்சி பாண்டி இறந்துவிட்டார். விபத்தில் இறந்துபோன பழனி எனது அப்பா ஆவார். 2017ம் ஆண்டு ஒருநாள் காலை 11:00 மணியளவில் நான் மதுரை - தேனி ரோட்டில் வேலு டீக்கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தபோது டம் என்று சத்தம்கேட்டு பக்கத்தில் போய் பார்த்தபோது சைக்கிளில் சென்ற எனது அப்பா கீழே விழுந்து கிடந்தார். அவர் சைக்கிளுடன் ரோட்டை கடப்பதற்காக வடக்கு பக்கமாக நின்று பார்த்துக்கொண்டிருந்தபோது அரசு பேருந்து அவர் மீது மோதியிருந்தது.

2. அதில் அவருக்கு தலையின் பின்பக்கம் அடிபட்டு இருந்தது. பேருந்து அங்கே நின்றிருந்தது. ஓட்டுநர் இல்லை, எனது அப்பா மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார். என்னுடன் சாட்சி மகாலிங்கம் அன்றையதினம் என்னுடன் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அவரும் சம்பவத்தை பார்த்தார். நான் அன்றையதினமே நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**அந்த புகார்மனு அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த புகாரில் அறிவேன் சாட்சியாக எனது அண்ணன் முத்துசாமி கையொப்பம் செய்துள்ளார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** நான் நகராட்சிக்கு முன்பாக சலூன் கடை வைத்துள்ளேன். எனது தம்பியும் அப்பாவும் தேனி ரோட்டில் உள்ள பொன்னுசாமி தியேட்டருக்கு அருகே உள்ள கடையில் வேலை பார்த்தார்கள். நான் சத்தம்கேட்டு எனது அப்பா அருகே

சென்றபோது அங்கே ஆட்கள் கூடியிருந்தார்கள். நான் அங்கு சென்று கூட்டத்தை விலக்கி பார்த்தபின்னர் தான் விபத்து ஏற்பட்டு கிடந்தவர் எனது அப்பா என தெரியவந்தது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்க 2 நிமிடங்கள் ஆகியிருக்கும். எனது அப்பா சைக்கிளில் வந்துவிட்டு இறங்கி நடந்து வரும்போது விபத்து நடந்துவிட்டது என்றால் சரிதான். போஸ்ட் ஆபிஸ் தெரு மதுரை - தேனி ரோட்டிற்கு வடக்கே உள்ளது. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து மதுரை - தேனி ரோட்டில் மேற்கு நோக்கி திரும்பி செல்ல வேண்டும் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் போலீசார் இரண்டு பேரிகார்டர் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். வாகனங்கள் மெதுவாக செல்ல வேண்டும் என்பதற்காக அந்த இடத்தில் பேரிகார்டர் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் எந்த வாகனமும் மெதுவாக வந்து தான் அந்த சிறிய இடைவெளியில் செல்ல முடியும் என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது அப்பா மேற்கிலிருந்து வந்த பேருந்தை கவனிக்காமல் ரோட்டை திடீரென கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதால் அது பற்றி தெரியவில்லை. புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. அவ்வாறு எழுதப்பட்ட புகாரில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

4. சம்பவத்தன்று சம்பவநேரத்தில் நான் சலூன் கடையில் இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல, நான் டீக்கடையில் தான் இருந்தேன். போலீசார் எழுதிவைத்திருந்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் விபத்து ஏற்படவில்லை என்றும் எனது அப்பாவின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னர்ல் சரிதான். அந்த விபத்து எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்ல்லை என்று சொன்னால் சரியல்ல.

S.d./ Rajendran

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.